Annual Subscription Rs.100/-


# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 28 இதழ் - 2 பிப்ரவரி 2015
தனிப்பிரதி ரூ.10/-




எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு
நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்
( சங்கீதம் 121 : 1 )


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.














### ஆசானின் அறிவுரையிலே ...

1. நிறுவன ஆசிரியர் உரை 3

2. ஏன் நாங்கள் ஒற்றுமையில் ... 7

3. பெண்கள் பகுதி 13

4. வாலிபர் பகுதி 17

5. சிறுவர் பகுதி 20

6. கிறிஸ்து என்னும் மார்க்கம் ... 22

7. நவீன போதகர்... 27

8. வேதாகமம் விடுக்கும் எச்சரி... 31

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 28 FEBRUARY - 2015 Issue - 2**


நிறுவன ஆசிரியர் உரை

# மௌன பாவம்

கர்த்தராகிய இயேசு, நியாயம் விசாரிக்கப்படும்படி பிரதான ஆசாரியர் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தபொழுது, அவருடைய சீஷர் களைப் பற்றியும், அவருடைய உபதேசங்களைப் பற்றியும் கேள்வி கேட்கப்பட்டன. (யோவான் *18:19-21*). இவைகளைப் பற்றித் தெரிந்திருந்தும் அதைப்பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டது வேண்டாத வேலை என்று நினைத்த ஆண்டவர், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் எதிர்க்கேள்வி கேட்டதுமன்றி நான் சொன்னவை களைக் கேட்டவர்களிடம் விசாரியும் என்று நறுக்கென்று பதில் அளித்தார். அதைச் செவி மடுத்த ஓர் அதிகாரி, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் சொல்வது? என்று இயேசுவை கன்னத்தில் அறைந்தான். (வ. *22*)

இயேசு, அந்த அதிகாரியின் அடாத செயலைக் கண்டித்து நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்பி, நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்? என்று கேட்டார் (வ. *23*) சில பேர் இந்த சம்பவத்தைச் சுட்டிக் காட்டி ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு (மத். *5:39*) என்று போதித்த ஆண்டவருடைய நடவடிக்கை முரண்படுகிறதே. மறுகன்னத்தையும் திருப்பிக் கொடுக்காமல் அவனிடத்தில் நியாயம் கேட்கிறாரே என்பர். அப்படிப்பட்டவர்களுக்குப் பதில் சொல்லும்

வகையில் "கய் N வுட்ஸ்" என்னும் வேத அறிஞர் யோவான் சுவிசேஷ வியாக்கியான நூலில், மார்ட்டின் லூதர் அவர்கள் சொன்ன கருத்தை மேற்கோள்காட்டி, கிறிஸ்து "கையால்" பதில் செய்வதைத் தான் கூடாது என்று சொன்னாரேயன்றி "வாயால்" பதில் செய்யக் கூடாது என்று சொல்லவில்லை என்கிறார்.

ஆம், சகோதரர்களே, சாந்தமும் பொறுமையும் அன்பும் நிறைந்த ஆண்டவர் எப்பொழுதெல்லாம் தவறு நடந்ததோ அப்பொழுது தெல்லாம் அதைக் கண்டிக்கத் தவறவில்லை. பாவத்தைக் கண்டு கொள்ளாமல் வாய் மூடி மௌனியாக இருப்பதைக் காட்டிலும் கோழைத் தனமும், மாய்மாலத்தனமுமான பாவம் வேறொன்றும் இருக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களில் நேர்மைக்காக எழுந்து நின்று போராடு வதற்கு மிகுந்த தைரியம் தேவை. இந்த விஷயத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அஞ்சா நெஞ்சம் பாராட்டத்தகுந்தது அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களின் பாவங்களையும் தேவ விரோதக் காரியங்களையும் கடுமையாகச் சாடி தங்களுடைய பணியை நேர்மையாகச் செய்தார்கள். தீர்க்கன் மீகா "*நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும் நியாயத்தி னாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்* " என்று கூறுகிறார். (மீகா. 3:8) அதே போன்று அவர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு தீர்க்கன் ஏசாயா" *சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே, எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதல்களையும் யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி* " என்கிறார். (ஏசாயா 58:1).

அவர்கள் இப்படித் தைரியமாக மக்களுடைய பாவங்களை கடுமையாகக் கண்டித்து பிரசங்கித்ததால் பெரிய இடத்துப் பொல்லாப்பு களைத் தேடிக் கொண்டு, துன்பங்களை அனுபவித்தனர் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும் அவைகளைப் பரிசுத்த ஆவியானவர் பொறுக்கி யெடுத்து வேத எழுத்துக்களில் பொறித்திருக்கிறார். ஏன் என்றால், அவர் களைப் போல கர்த்தருடைய பணியைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிற நாமும் கூட தைரியமாகப் பாவத்துக்கு எதிரே போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் (எபி. *11:32- 12:4*).

நீங்கள் நீதிக்காக எழுந்து நின்று போராடும் இயல்புடையவர்களா? அப்படியானால் நீதியினிமித்தம் துன்பம் அனுபவித்த உண்மையுள்ள தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி நீங்களும் நடக்க வேண்டும். (ரோமர் 15:4) இதைக் குறித்து யாக்கோபு " *என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்துதலுக்கும் நீடிய*

*பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்"* (யாக். 5 : 10) என்கிறார்.

மீண்டும் புதிய ஏற்பாட்டில், மேசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்டவனும், ஒட்டக மயிர் உடைய அணிந்து காட்டுத் தேனையும் வெட்டுக் கிளியையும் உணவாக்கிக் கொண்டவனும் (மத். *3-4)* எலியாவின் ஆவியை உடையவனுமாகிய யோவான் ஸ்நானகன், அந்நாளில் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும், சதுசேயர்களையும் " *விரியன் பாம்புக் குட்டிகளே,* " நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எரி நரகத்தில் தள்ளப்படுவது நிச்சயம் என்று கர்ஜிக்கிறார். (மத். *3:1-12,11:14).*

அரசனும் கூட யோவானின் சொல்லடிக்குத் தப்பமுடியவில்லை. விபச்சாரம் பெருகி விட்ட இந்தக் காலத்தில், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு ஏன்? என்ற மனநிலையோடு சம்பந்தப்பட்டவர்களின் காதுக்குள்ளே போய் முணுமுணுக்கும் ஒரு விஷயத்தை இவர் பகிரங்கமாக நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்ல என்று குற்றம் சாட்டுகிறார். ஆம், ஏரோது அரசன் தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியோடு வாழ்ந்தது நியாயப் பிரமாணத்துக்கு விரோதமானது. அரசனே விபசாரக் குற்றவாளியாக இருந்தால் மக்கள் நீதியின் வழி நடப்பது எப்படி? யோவான் அதைத் தட்டிக்கேட்ட காரணத்தால் அவர் தலை துண்டிக்கப்பட்டது. ஆம், சகோதரர்களே! பாவத்தைக் கண்டிக்கத் துணிவு இல்லாமல் நம் தலை உடலோடு ஒட்டிக் கொண்டிருப்பதை விட நாம் சத்தியத்தைப் பிரசங்கித்ததினால் நம் தலை துண்டிக்கப்பட்டு தட்டில் வைக்கப்படுவது மேல். நீர் இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்தைப் பிரகடனம் செய்யும் உண்மையுள்ள ஊழியனா? ஆம் என்பது உமது பதிலானால் யோவான் ஸ்நானகனின் சீரிய முன்மாதிரியைப் பின்பற்று.

இயேசு கிறிஸ்து யூதரின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டதைப் போல பவுல் அப்போஸ்தலன்கூட நிறுத்தப்பட்டார். அப்பொழுது பவுலும் இயேசுவின் அடிச்சுவட்டையே பின்பற்றினார். புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக ஏற்படுத்தப்பட்ட இந்த அபபோஸ்தலன் உண்மையாகவே ஒப்பு நோக்க முடியாத கர்த்தருடைய ஊழிக்காரன் என்பதில் சந்தேகமில்லை.


ரோமாபுரியில் சக்கரவர்த்தி சீசருக்கு முன்பாக முதல் விசை விசாரிக்கப்பட நின்ற பொழுது ஒருவரும் அவனுடன் கூட இருக்கவில்லை என்று கூறுகிறார். (II தீமோ. *4:26)* இருந்தாலும் அவர் பெற்ற அந்தத் தைரியம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதை அவருடைய வாயாலேயே சொல்லுகிறார், கேளுங்கள் *"கர்த்தரோ எனக்குத் துணை"*

நின்றார் என்கிறார் (II தீமோ. *4:17*) அப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே அவர் ஊழியத்துக்கு அழைக்கப்பட நேரத்திலிருந்தே அவருடைய பெலனும் நம்பிக்கையும் கர்த்தரே. (பிலி. *1:17;4:13*). அதனால் தன் இறுதி நாட்களில் பவுல் நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்று சொல்ல முடிந்தது. (II தீமோ. *4:7*) நீங்கள் உத்தம இருதயத்தோடு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறதாயிருந்தால் அவரைப் பின் தொடர்ந்து நீங்களும் நித்தியத்தை அவரோடு கழிக்கமுடியும்.

நீங்கள் உண்மையாய் சத்தித்தைப் போதிக்கிறவர்களாயிருந்தால் வேதாகமத்தில் உள்ள எந்தக் காரியத்தையும் மறைந்து வைக்கக் கூடாது. (அப். *20:27*) நாம் விசுவாசிக்கிற, போதிக்கிற, கடைப்பிடிக்கிற அனைத்துக் காரியங்களுக்கும் வேதாகம அங்கீகாரம் இருக்க வேண்டும். (கொலோ. *3:17*) எந்த ஒரு தனி நபரானாலும், எந்நிறத்தவரானாலும் குழு அல்லது கூட்டத்தாரானாலும், அவர்கள் உறவினரோ, நண்பரோ, சபையைச் சார்ந்தவர்களோ, பட்டம் பெற்றவர்களோ, பதவியிலுள்ளவர் களோ எவரானாலும் சரி; தவறான உபதேசங்களைப் போதித்தால் அவர் களுடைய தவறைச் சுட்டிக் காட்டுவதற்குத் தயங்கவே கூடாது. அப்படிச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி எப்படிப்பட்ட தாயிருக்கும் என்று தெரியாமல் இல்லை. தவறு இழைக்கிற மக்கள் திரள். தங்கள் செல்வாக்கு, பணபலம், ஆள்பலம், ஆட்சி பலம் ஆகிய வற்றைக் காட்டி, மிரட்டி, பல முனைகளிலும் நமக்குப் பிரச்சனைகளை உருவாக்குவார்கள், துன்பம் செய்வார்கள் அது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. "*கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்*" என்று அன்றே சொல்லப்பட்டுத் தானே இருக்கிறது. (II தீமோ. *3:12*) சத்தியத்தைப் போதித்ததினால் துன்புறுத்தப் பட்ட இயேசு, தீர்க்கர்கள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களை விட நீங்கள் மேலானவர்களல்லவே! அவர்களுடைய பாடுகளுக்கு நீங்களும் பங்காளிகளாகி அவர்களுடைய ஆசீர்வாதத் திலும் பங்கடையுங்கள் (II தீமோ. *2:12*).

" **திருமறை ஆசான்** " மாத இதழின் நிறுவன ஆசிரியரும், எனது அன்புத் தகப்பனுமாகிய **E.Z. செல்வநாயகம் அய்யா** அவர்கள் கர்த்தருக்குள் மரித்து, **09.02.2015 உடன் 22 ஆண்டுகள்** முடிந்துவிட்டது. அவர் நினைவாக இம்மாதம் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

– ஆசிரியர்.



# ஏன் நாங்கள் ஒற்றுமையில் நம்பிக்கை வைக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

கிறிஸ்தவத்தில் ஒற்றுமையை விட முக்கியமானது வேறொன்றும் இல்லை. தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் இவர்களிடையே ஒற்றுமை இருக்கிறது. வேத வசனங்களில் ஒற்றுமை இருக்கிறது. சபையாகிய தேவனுடைய குடும்பத்தில் விசுவாசிகள் மத்தியில் ஒற்றுமை காணப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் மனிதனுக்கும், கர்த்தருக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுகிறது.

ஒற்றுமை என்பதின் பொருள் ஒருமைப்பாடு, முழுமை மற்றும் பூரணத்துவம் என்பதாகும். இன்னும், இது ஒத்துப்போவது, ஒன்றுபடுவது, கூட்டாகச் செயல்படுவது மற்றும் இணைந்து பாடுபடுவது.

கர்த்தருடைய சபையாயிருக்கிற கர்த்தருடைய மக்களாகிய நாங்கள் ஒற்றுமையில் நம்பிக்கை வைக்கிறோம். ஏனென்றால், ஒற்றுமைக்கு எதிரானது பிரிவினையாயிருக்கிறது. ஒற்றுமை பற்றி தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு, பிரிவினை பற்றி வேத வசனங்கள் என்ன சொல்கிறதென்று பார்ப்போம். பிரிவினை என்றால் என்ன? அது எதற்கு அடையாளமாக இருக்கிறது? அது எதற்கு வழிவகுக்கிறது? நாம் ஒவ்வொருவரும் மிகப் பெரிய விசுவாசிகளாகவும், ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறவர்களாகவும் இருப்போம். நீண்ட காலத்திற்கு முன்பு சாலொமோன் ஞானி பிரிவினை குறித்து இப்படியாகச் சொல்கிறார். " சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் " கர்த்தர் வெறுக்கிற ஏழு காரியங்களில் ஒன்று என்று (நீதி. 6:19). இது பிரிவினையை உண்டு பண்ணுகிற ஒருவன் பற்றியே குறிப்பிடுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் " (ரோமர் 16:17,18). இங்கே பவுல் பிரிவினைகளையும், இடறல்களையும்

உண்டாக்குகிறவர்களை அடையாளம் காண வேண்டுமென்று ரோமபுரியாரை ஊக்கப்படுத்துகிறார். சிலர், உபதேசத்திற்கு விரோதமான காரியங்களைப் போதித்துக்கொண்டும், செய்து கொண்டும் இருந்தனர். எனவே, அவர்கள் குறிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்கிறார். இக்காரியத்தில் மேற்கூறப்பட்ட ஒழுங்கற்ற செயல்களைச் செய்தவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யாதபடியால் அவர்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்கிறார். மாறாக, அவர்கள் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்கிறதாக பவுல் கூறுகிறார். அதாவது, அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைத் தங்கள் சொந்த ஆதாயத்திற்காகச் செய்கிறதாக பவுல் கூறுகிறார். கடைசியாக, பவுல் அவர்கள் தங்கள் நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்று எச்சரிக்கிறார். இங்கே நேரிடையாகக் குறிப்பிட்டுத் தானே பவுலடியார் சொல்கிறார், அப்படித்தானே? மேலும், அநேகர் தவறான வழியில் நடத்தப்பட்டு விடாதபடி ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களை எச்சரிப்பது பவுலுக்கு அவசியமாகக் காணப்பட்டது.

I கொரிந்தியர் *1:11-17* வசனங்களில், கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் இப்படியாக எழுதினார். ஏனெனில், *என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர்; நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்கிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை; இதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல், இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானங் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்"* என்று. இதற்கு முந்தைய வசனப்பகுதியில், கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட பிரிவினையை பவுல் கண்டறிந்ததை நாம் கவனித்தோம், அங்கே சபை அங்கத்தினர்களில் சிலர், தாங்கள் பவுலைச் சேர்ந்தவர்களென்றும், அப்பொல்லோவைச் சேர்ந்தவர்களென்றும், பேதுருவைச் சேர்ந்தவர்களென்றும், கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லிக் கொண்டார்கள். அது தவறென அவர்கள் காண உதவும்படி

பவுல், அவர்களைப் பார்த்து, மூன்று கேள்விகளைக் கேட்டார். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறைப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? கடைசியாக, பவுலின் நாமத்தினாலேயா, அப்பொல்லோவின் நாமத்தினாலேயா, பேதுருவின் நாமத்தினாலேயா யாருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்டார்? நிச்சயமாகவே, கிறிஸ்து பிரிந்திருக்கவில்லையென்றும், கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையில் அறையப் பட்டார் என்றும், கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஞானஸ்நானம் பெற்றதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அது உண்மையாயிருக்க, பவுலையும், மற்றவர்களையும் பின்பற்றுவது அவர்களைப் பொறுத்த வரை நியாய மற்றதாயிருந்தது. கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை என்பதாலும், கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையிலறைப்பட்டபடியாலும், கிறிஸ்துவின் நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபடியினாலும் அவர்கள் கிறிஸ்துவை மாத்திரம் தான் பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். கொரிந்து சபையில் ஏற்பட்ட சூழ்நிலையினால், அநேகர் தன்னைப் பின்பற்றிவிடாதபடி நல்லவேளை நான் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்று சொல்கிறார். ஆயினும், தான் கிறிஸ்புக்கும், காயுவுக்கும், ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாகக் கூறுகிறார். பவுல் தொடர்ந்து, ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து தன்னை அனுப்பவில்லையென்றும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினதாகவும் கூறுகிறார். பவுல், சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டிருக்கிறபடியால், ஞானஸ்நானம் அவசியமில்லையென்றோ அல்லது பவுல் ஞானஸ்நானமே கொடுக்கக்கூடாது என்றோ சொல்லவில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மாறாக, தான் ஞானஸ்நானம் மாத்திரம் கொடுக்க அனுப்பப்படவில்லையென்றும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தான் பிரதான நோக்கம் என்றும் கூறுகிறார். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால், யாராவது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய விரும்பினால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டியது சரியான ஒன்றாவே இருக்கும். ஆனால், இங்கே பவுல், முதல் காரியங்கள் முதலில் வரவேண்டும் என்று கூறுகிறார், அவ்வளவே.

நாங்கள் மேற்கோள் காட்டியிருக்கிற பலதரப்பட்ட வசனங்களிலும், கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுடைய காரியத்திலும், கர்த்தர் பிரிவினையில் பிரியப்படவில்லை என்றும் மாறாக, அவர் அதை எதிர்த்துக் கடிந்து கொள்கிறார் என்றும் நம்மால் பார்க்க முடிகிறது. அது உண்மையாயிருக்க, வேத வசனங்கள் ஒற்றுமையைப் பற்றி என்ன சொல்கிறது என்று இப்பொழுது பார்ப்போம். கொரிந்து பட்டணத்தில் உள்ள சபைக்கு நாம் மறுபடியும் செல்வோம், அங்கே இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் இப்படியாக எழுதினார். சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக

யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (I கொரி. 1:10) இங்கே திட்டமாக பிரிவினை கண்டிக்கப்பட்டு ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது. யோவான் பதினேழாம் அதிகாரத்தில், நம் கர்த்தர், அப்போஸ்தலர்களின் சார்பாகவும், இயேசுவை விசுவாசிக்கிறவர்களின் சார்பாகவும் பிதாவை நோக்கி ஜெபித்தார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காவும் வேண்டிக்கொள்கிறேன், அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப் பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல, அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்" (யோவான் 17: 20-23). இங்கே கிறிஸ்து, அப்போஸ்தலர்களுடைய வார்த்தையினால் தன்னில் விசுவாசம் வைக்கப் போகிறவர்களுக்காக ஜெபிக்கிறேன் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, இங்கே வார்த்தைகளினால் என்பது, மாற்கு 16:15,16 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால், எல்லாரும் ஒன்றாயிருக்க முடியும் என்று பொருள்படும். இயல்பாகவே, எல்லா அப்போஸ்தலர்களும் ஒரே செய்தியைப் பிரசங்கித்தால், எல்லோரும் அதை விசுவாசித்தால், எல்லோரும் ஒரே காரியத்தை விசுவாசிப்பார்கள். ஒரே காரியத்தைச் செய்வார்கள், அப்பொழுது அங்கே எல்லாரும் ஒன்றாயிருப்பார்கள். மீண்டுமாக, கிறிஸ்துவானவர் தானும், பிதாவும் ஒன்றாயிருப்பது போல எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபம் பண்ணினார். இது பூரண ஒருமைப்பாடாக இருக்கும். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி இயேசு ஜெபம் பண்ணினதற்கான மற்றொரு காரணம், பிதா தன்னை அனுப்பினதை இந்த உலகம் விசுவாசிக்க வேண்டுமென்பதற்காக. விசுவாசிகள் எல்லாரும் பிரிந்து ஒருவரையொருவர் எதிர்த்தால், அது தீங்கைத்தான் விளைவிக்கும். அப்போது உலகம் அவர்களைப் பார்த்து சிரிக்கும். ஒற்றுமையானது நன்மையை உண்டாக்கக்கூடிய அபார சக்தியாக இருக்கிறது. அதே வேளையில், பிரிவினையானது அழிவை ஏற்படுத்தக்கூடியதாய் இருக்கிறது.

எபேசியர் 4:1-6 வசனங்களில், அப்போஸ்தலனாகிய பவுல் ஒற்றுமைக்கான அடித்தளத்தை அமைக்கிறார். "ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்கிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய்

நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் " . இங்கே, ஒரே சரீரம் அல்லது ஒரே சபை, ஒரே நம்பிக்கை போன்றவற்றை அடிப் படையாக வைத்து, பவுல் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடுப்பதை கவனியுங்கள். வேறு விதமாகச் சொன்னால், நமக்கு ஒரே தேவன் அல்லது பிதா உண்டு. அவர் தம்முடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அதைப் போலவே, நமக்கு ஒரே கர்த்தர் உண்டு. நாமெல்லாரும் ஒரே உபதேசத்தை விசுவாசித்து, தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலைக் குறிக்கும். ஞானஸ்நானத்தில் கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால், சபையாகிய ஒரே சரீரத்தில் நம் எல்லோ ரையும் சேர்த்துக் கொள்கிறார். அந்த சபையில், நம் எல்லோருக்கும் நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை உண்டு. என் நண்பர்களே, நாமெல் லாரும் ஒரே கர்த்தரை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்தால் நாம் எப்படி பிரிந்திருக்க முடியும்? அது நம்மைப் பிரிக்காது. மாறாக, நம்மை இணைக்கும். முன்பொரு காலத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது இப்படிச் சொன்னார். *இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது?* " (சங். 133:1) என்று.

என் நண்பர்களே, இன்று மத உலகில், நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் மத்தியில் பிரிவினைகள் அதிகமாகக் காணப்படுகிறது. இது மிகுந்த துக்கத்தையும், வேதனையையும் அளிக்கிறது. இந்நிலைக்காக கிறிஸ்துவையும், அவரு டைய உபதேசத்தையும் குற்றஞ்சாட்டக் கூடாது. மாறாக, மனிதன் தான் இதற்குப் பொறுப்பாளி. ஏனென்றால், கர்த்தர் எதைச் செய்யும்படியாக கேட்டுக் கொண்டாரோ அதை மாத்திரம் செய்வதற்கு அநேகருக்கு விருப்பமில்லை. இந்தப் பிரிவினை நிலை உங்களையும் வஞ்சிக்க நீங்கள் தயவு செய்து இடமளித்து விட வேண்டாம். சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி இயேசுவிடமும், அவருடைய வார்த்தைகளிடமும் செல்லுங்கள். அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும் போது, நீங்கள் இரட்சிக்கப்பட்டு, வேதத்தில் நாம் வாசிக்கிற கர்த்தருடைய சபை யாகிய ஒரே சபையில் கர்த்தரால் சேர்க்கப்படுவீர்கள். அப்போது கர்த்த ருக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்தவர்களோடு நீங்களும் இணைக்கப் படுவீர்கள். ஆம், கிறிஸ்து எவ்வகையான ஒற்றுமைக்காக ஜெபித்தாரோ அதே ஒற்றுமை இப்போதும் சாத்தியமே. நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகம் போக வேண்டுமென்றால், இதற்கு குறைவான எதிலும் நாம் திருப்திபட்டு விடக்கூடாது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரா? இல்லையென்றால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதினால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக முடியும். நீங்கள் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கும்படி கர்த்தர் உங்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக் கொள்வார். நீங்கள் அவருக்கு கீழ்ப்படியும் போது, உங்களை எந்த சபையில் சேர்க்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அந்த சபை தான் கிறிஸ்துவுக்குச் சொந்தமான ஒரே ஒரு சபை.

## வேதாகமம் வாழ்கிறது

தலைமுறைகள் வருகிறது, போகிறது – இருப்பினும் வேதாகமம் வாழ்கிறது

தேசங்கள் வீழ்கிறது எழுகிறது – இருப்பினும் வேதாகமம் வாழ்கிறது

நாத்திகர்கள் வேதாகமத்தைத் தாக்குகிறார்கள் –இருப்பினும் வேதாகமம் வாழ்கிறது

பிறமதத்தவர் ஏளனம் செய்கிறார்கள் – இருப்பினும் வேதாகமம் வாழ்கிறது

தவறாகக் குற்றம் சாட்டப்படுகிறது – இருப்பினும் வேதாகமம் வாழ்கிறது

ஆம், வாழ்கிறது – கால்களுக்குத் தீபமாக

ஆம், வாழ்கிறது – வெளிச்சமாக

ஆம், வாழ்கிறது – பரலோக வழிகாட்டியாக

ஆம், வாழ்கிறது – இளைஞர்களுக்கு கலங்கரை விளக்காக

ஆம், வாழ்கிறது – முதியோர்களுக்கு ஆறுதலாக

ஆம், வாழ்கிறது – பசித்தவர்களுக்கு ஆகாரமாக

ஆம், வாழ்கிறது – தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீராக

ஆம், வாழ்கிறது – அறியாமை இருளிலிருப்போருக்கு ஒளியாக

ஆம், வாழ்கிறது – பாவிகளுக்கு இரட்சிப்பாக

ஆம், வாழ்கிறது – விசுவாசிப்பவர்களுக்கு கிருபையாக

இப்படிப்பட்ட வேதத்தை அறிந்துகொள்ள நேசிக்க வேண்டும் நேசிக்கும் போது ஏற்றுக்கொள்ள முடியும். ஏற்றுக்கொள்பவர்களுக்கு நித்திய "ஜீவன்" உண்டு.

தமிழில் : EZSR

பெண்கள் பகுதி

# நமக்குள் சென்று நம்மை சரியானபடி சரிசெய்து கொள்ளுதல்

**Sis. R. R. NAYAGAM**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்திரங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடமுழுவதும் நம்மை காத்த தேவன் இந்த ஆண்டும் நம்மை வழி நடந்த வல்லமையுள்ளவராயிருக்கிறார். பூமிக்குரிய காரியங்களில் வழி நடத்தப்பட ஆவிக்குரிய வகையில் நம்மை நிதானித்து நமக்குள்ளாக சென்று பரிசுத்தத்தை நிலைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். இவ்வாறு ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டோமானால் நிச்சயமாக கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் அர்த்தமுள்ளதாக, நம்பிக்கையுள்ளதாக இருக்கும்.

அப்படியென்றால், இக்காரியங்களைச் செய்ய நாம் யாரென்று நமக்குள்ளாக சென்று பார்த்தல் அவசியமானது. சில சமயம் ஆவிக்குரிய விஷயத்தில் வளர்கிறோம் அல்லது அப்படியே அழித்துக் கொள்கிறோம். முன்னேறிச் செல்வதும், நம்மை நாமே சரி நிலையில் வைத்துக் கொள்வதும் கூடாத காரியம். ஆகாய விமானம் போன்றவைகளுக்குக்கூட அதற்கென்று கருவிகள் இருக்கின்றன. ஆனால், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அப்பேர்ப்பட்ட கருவிகள் ஏதும் இல்லை.

செப்பனியாவை தேவன் அழைத்து யூதாவின் மனந்திரும்புதலைப் பற்றி சொல்லச் சொன்னபோது, "*அக்காலத்திலே நான் எருசலேமை விளக்குக் கொளுத்திச் சோதித்து, வண்டல்போலக் குழம்பியிருக்கிறவர் களும், கர்த்தர் நன்மை செய்வதும் இல்லை, தீமைசெய்வதும் இல்லை யென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனுஷரைத் தண்டிப்பேன்*" (செப். 1:12) என்கிறார். அங்கே அவர்களைக் கிட்டே போய் சோதித்தறிய வேண்டிய சூழ்நிலை வந்து விட்டது. அவர்களுக்கு ஏற்படக்கூடிய தண்டனையைப் பற்றி நினைவுபடுத்துவது செப்பனி யாவுக்கு அவசியமாயிற்று.

அன்பானவர்களே! தேவன் நம்மை தெளிவாக, ஜாக்கிரதையாக பார்த்துக் கொண்டேயிருக்கிறார். நாம் எதை, எதை தெரிந்து கொண்டிருக் கிறோம் என்பதைக் தன் தெய்வீக பார்வையில் பார்த்துக் கொண்டிருக் கிறார். வேதாகமம் சொல்லுகிறது, தேவன் நம்மை எப்படியெல்லாம் பார்க்கிறார், எப்படியெல்லாம் நியாயம் செய்கிறார் என்பதை நாம் அறிந்துதான் வைத்திருக்கிறோம். இதைப்பற்றிச் சொல்லுவதற்கு ஒரு வார்த்தையிருக்குமானால், தேவன் நமக்குப் பக்கம் பக்கமாக கடிதம் எழுதி வைத்திருக்கிறார்.

மேலும், பிரியமானவர்களே! அநுதினமும் கவனம் செலுத்தக் கூடிய சில காரியங்கள் நம் வாழ்க்கையில் இருக்கவே செய்கிறது. அதில் மூன்று காரியங்கள் பற்றி இம்மாதம் நாம் கற்றுத் தெரிந்து கொள்வோம்.

**முதலாவது** நாம் நமக்குள்ளே சென்று நம்மைச் சரியானபடி சரி செய்து கொள்ள வேண்டுமென்றால் பாவம் பற்றிய உண்மைகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். யாக்கோபு இதைப்பற்றி கூறும்போது, *நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்* (யாக். 3:2) என்று கூறுகிறார். தவறு இழைப்பது என்பது பொதுவாக அனைவருக்கும் பொருந்தக்கூடிய சொல். யாக்கோபு ஆசிரியர் இங்கு நாம் என்று தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி (ரோமர் 3:23) என்பதிலிருந்து பாவத்தை எப்படியோ மனிதன் செய்து கொண்டேதான் இருக்கிறான். நம்மை நாமே சரியாக நிதானித்து கற்றுக்கொள்ள வேண்டுமானால் முதலாவது நாம் பாவஞ்செய்கிறோம் என்பதை ஒத்துக் கொள்ளவேண்டும். ஆனால், அநேகர் ஒருபோதும் தங்கள் தவறுகளை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். நான் எங்கே பாவம் செய்கிறேன் என்பார்கள். ஒருவேளை தன்னால் மதிக்கப்படுகிற நேசிக்கப்படுகிற ஒருவரைப் பற்றி கூறும்போது அவர்கள் பாவம் செய்யமாட்டார்கள் மிகவும் நல்லவர்கள் என்று கூறிக்கொண்டு அப்படி ஒரு நிதானிப்போடு முடித்துக் கொள்வோம் அவ்வளவு தான். எப்படி ஒரு மனிதன் பாவஞ்செய்யாமல் இருக்க முடியும்? யார் இதை நம்புவார்கள்? அப்படியென்றால் கிறிஸ்து அப்படியொரு கொடூர மரணத்தை சிலுவையில் சந்தித்திருக்க வேண்டியதில்லையே. அருமையானவர்களே! பாவத்தைக் குறித்த சிந்தை நம்மிடத்தில் எப்படியுள்ளது? பாவம் அதற்குரிய தண்டனை பற்றிய முழு உண்மையையும் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையைக் கேட்பதோடு நிறுத்திக் கொள்ளக் கூடாது. அதன்படி செய்யப் பழக வேண்டும். அதுதான் அர்த்தம் பொதிந்ததாக உள்ளது. பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டேயிருப்பதில் பிரயோஜனம் வந்து விடாது. மாறாக, அதை செயல்படுத்தப், பழக வேண்டும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதென்பது அதோடு கூட்டவும், கழிக்கவும் கூடாது. மாத்திரமல்ல வசனத்துக்கு மாற்றாக எதையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

**இரண்டாவதாக,** நாம் நமக்குள்ளே சென்று நம்மை சரியானபடி சரி செய்து கொள்ள வேண்டுமென்றால், நாம் தினமும் மனந்திரும்ப வேண்டும். ஏனென்றால், தினமும் நாம் பாவம் செய்கிறோம். மனந்திரும்பினாலொழிய தேவனோடு தொடர்ந்து நம் உறவை வைத்துக் கொள்ள முடியாது. லூக்கா 13-ம் அதிகாரத்தில் இயேசுவிடம் வந்து, பிலாத்து சில கலிலேயருடை இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான் என்று சொல்லுகிறார்கள். எதனால் இப்படிச் சொன்னார்கள் என்று நமக்கு காரணம் தெரியவில்லை. எல்லாவற்றையும்

அறிந்த இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே மற்ற எல்லாக் கலியேரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? என்று கூறி விட்டு அவர்கள் அவர்களுக்குள்ளே சென்று பார்க்கும் படியாக *"அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"* என்று சொல்கிறார்.

இன்னும் தன் பதிலைப் பூரணப்படுத்தும் வகையில் மற்றுமொரு விளக்கத்தைக் கொடுக்கிறார். *"சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக் கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"* என்றார். மனந்திரும்பு இல்லையேல் அழிவு தான்.

**மூன்றாவதாக,** நம்மை நாம் நமக்குள்ளே சென்று நம்மை சரியானபடி சரிசெய்து கொள்ள வேண்டுமென்றால் தேவன் ஆளுகை செய்து கொண்டிருக்கிறார் என்ற மாற்றமுடியாத இம்மாபெரும் உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவனின் ஆளுகை என்ற இவ்வார்த்தையை ஏதோ போகிற போக்கில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாட்டில் நடக்கும் அழிவுகள், சீரழிவுகள் இவைகளைப் பார்க்கும்போது, கேட்கும் போது தேவன் ஆளுகை செய்கிறார், அவருடைய வல்லமையை மீறி ஏதுமில்லை என்றெல்லாம் பேசுகிறோம். ஆம், அவர்தான் அதிகாரமுள்ளவர். அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் அவருடைய அதிகாரத்தை எதிர்க்க யாருக்கும் அதிகாரமில்லை. எந்த ஒரு சக்தியோ, ஒரு தேசமோ, பூமியில் பிறந்த எந்த ஒரு மனிதனோ தேவன் செய்ய நினைத்ததை அல்லது அனுமதித்ததை மீறி ஒன்றைச் செய்துவிட முடியாது. தேவன் பேசும் போது இந்த உலகம் கவனித்தே ஆக வேண்டும். அவர்கள் உணர்கிறார் களோ இல்லையோ வார்த்தைகளுக்கு செவி சாய்த்தே ஆக வேண்டும்.

நீதி. *19:21, "மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம். ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்".*

*சங். 146:3,4, "பிரபுக்களையும், இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போகும்".*

*சங். 135:5,6, "கர்த்தர் பெரியவர் என்றும், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும் நான் அறிவேன். வானத்திலும், பூமியிலும் சமுத்திரங்களிலும் எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்"* (சங். 33:10,11).

*கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி ஜனங் களுடைய நினைவுகளை அவமாக்குகிறார். கர்த்தருடைய ஆலோசனை*

நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலை முறை தலைமுறையாகவும் நிற்கும்.

இதை வாசித்த அருமையான சகோதரிகளே, நாம் நம்பிக் கொண்டிருக்கிற தேவனின் மகத்துவத்தைப் பார்த்தீர்களா? நாம் பேசாமல் அவர் சித்தத்துக்கு கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழியில்லை. ஆக, நாம் சில தீர்மானங்களை எடுப்போம். நானும் என் தேவனும் நீண்ட நேரம் பேச வேண்டும். அவர் சொல்வதை நான் கேட்க வேண்டும். தாழ்மையாக அவர் சித்தத்தை ஏற்றுக்கொண்டு என்னை நம்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். மிக அழகாக, தெளிவாக வழியை நமக்கு வரைந்து கொடுத்திருக்கிறார். அன்போடு, ஆசையோடு அதை நான் தொடர்ந்து செல்ல வேண்டும். எப்படியோ இந்த உண்மைகளை நாம் ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறோம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர் சொன்ன வழியிலே சென்று தேவனே நான் வளர உதவி செய்யும் என்று சொல்லவேண்டும். எனக்கான எல்லா சித்தத்திற்கும் நான் "ஆமென்" என்று சொல்ல வேண்டும்.

அன்பானவர்களே! வரும் காலங்களில் நாம் இவ்வாறக செய்யப் பழகிக் கொண்டால் நம்மை நாம் சரியானபடி சரி செய்து, நமக்குள்ளே சென்று பரிசுத்தமாய் காத்துக்கொள்ள உதவியாய் இருக்கும். அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக! ஆமென்!

## அனுதின வாழ்க்கைக்கான நெறிகள்

தேவனை நோக்கி முழங்கால்படியிட்டு ஜெபித்து, ஒவ்வொரு நாளையும் துவங்கவும்.

ஒவ்வொரு காலை வேளையிலும் வேதாகமத்தைத் திறந்து ஒரு வேத பகுதியை வாசிக்கவும்.

செய்கிற ஒவ்வொரு வேலையிலும் அவரை நினைத்து அவரோடு செலவழிக்கவும்

ஒவ்வொரு செயலைச் செய்யும்போதும் மனதிலே தேவ வார்த்தையை எண்ணிச் செய்யவும்.

ஒவ்வொரு நாளை முடிக்கும் போதும் அன்றைய நிகழ்வுகளை தேவ வசனத்தோடு ஒப்பிட்டுத் தியானித்து படுக்கைக்குச் செல்லவும்.

வாலிபர் பகுதி

# சத்தியத்தை நேசி

**Bro. பென்னி மார்ட்டின்**

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இவ்வுலகம் முன்பெப்போதையும் விட மோசமாகிவிட்டது என்பதற்கு ஆதாரமாக இவ்வுலகில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் உள்ளன. இன்றைய நாட்களில் விரல் நுனியில் பாவங்கள் அரங்கேறுகின்றன. பலர் பாவம் என்னும் வார்த்தையை பயன்படுத்துவதற்கே தயங்குகிறார்கள், அதை தவறு என்றழைத்து அதன் கோரத்தைக் குறைக்க விரும்புகிறார்கள். தேவனுடைய பிள்ளை களாகிய நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று வேத வசனங்கள் சொல்கின்றன (பிலி. 2: 15). தேவனால் அழகாகப் படைக்கப்பட்ட இவ்வுலகம் அதன் அடையாளத்தைத் தொலைத்து அழிந்து போய்க்கொண்டிருப்பதற்கான காரணம் இவ்வுலகத்தின் மக்கள் சத்தியத்தை நேசிக்கமால் போவது தான். சத்தியம் என்றால் என்ன? இவ்வுலகத்தின் மக்களிடம் இதைக் குறித்து விசாரித்தால், அவர்கள் ஆணையிடுதல் என்னும் பொருளைக் கொடுப்பார்கள். சத்தியம் என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். தமிழில் உண்மை என்பது அதன் பொருளாய் இருக்கிறது. பொய்கள் நிறைந்த இவ்வுலகில் பொய்க்குப் பிதாவாகிய பிசாசு சத்தியம் என்னும் வார்த்தை யையே ஏறக்குறைய மக்களிடம் மறக்கடித்துவிட்டான். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை இப்பாழாய்ப்போன உலகில் தூக்கிப்பிடிக்க வேண்டியவர்களாயிருக் கிறோம். இப்போது சத்தியம் நம் வாழ்வில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், நாம் சத்தியத்தை எப்படிக் கையாள வேண்டுமென்றும் பார்ப்போம்.

**I நாம் சத்தியத்தை நேசித்தால் அதைப்படிப்போம்**

நாம் சத்தியத்தை நேசிப்பவர்களாக இருந்தால் அதற்கென்று நேரம் எடுத்து அதைப்படிப்போம். அப்போஸ்தலனாகிய பேதுரு நாம், சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை ஒரு சிறு குழந்தை பால் குடிக்க எவ்வளவு விரும்புகிறதோ, ஏங்குகிறதோ அதேபோல் நாம் விரும்ப வேண்டுமென்றும், அது நம்முடைய விருப்பமாக மட்டுமல்லாமல் நமக்கு அவசியமான ஒன்றாக இருக்க வேண்டும் (1பேதுரு 2:3) என்றும் கூறுகிறார். நாம் திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருந்து

அதை அதை உட்கொண்டால்தான் ஆவிக்குரிய பிரகாரமாக வளர முடியும். மேலும், 2 பேதுரு 1:5-7 வசனங்களில், இடம் பெற்றிருக்கிற கிறிஸ்தவ பண்புகளை நம்முடையதாக்கிக் கொண்டால்தான் நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளர முடியும். நாம் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர்களாக இருந்தால் நாள் முழுவதும் அது நம் தியானமாக இருக்க வேண்டும் (சங். 119:97). நாம் பல பிரசங்கங்களிலே வேத பாட வகுப்புகளிலே தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டாலும் தனிப்பட்ட வேத தியானத்திற்கு இணையாக நாம் எதையும் சொல்லவே முடியாது. இன்று பெரும்பாலான வாலிபர்கள் சினிமா கதைகளையும், நாவல் களைப் படிப்பதிலும், விளையாட்டுப் போன்ற பொழுதுபோக்கு அம்சங் களிலும் தங்கள் நேரத்தை விரயம் செய்வதை நாம் பார்க்கிறோம். அதற்குப் பதிலாக சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதைத் தியானித்துப் படித்தால் அது தேவனுக்கு எவ்வளவு பிரியமாக இருக்கும்!.

## II நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்கு ஆதரவாகப் பேசுவோம்


இன்று உலகத்தின் மக்கள் தேவனுடைய வார்த்தைகளிலிருந்து விலகி எவ்வளவு தூரம் போகமுடியுமோ அவ்வளவு தூரம் போக விரும்பு கிறார்கள். அவர்கள் தங்களால் முடிந்தவரை தேவனுடைய வார்த்தையை எதிர்க்கிறார்கள். வேதாகமத்தை பின்பற்றுகிறோம் என்று சொல்கிற வர்கள் கூட அதில் சில ஓட்டைகளைக் கண்டுபிடித்து தங்கள் செயல் பாடுகளை நியாயப்படுத்த விரும்புகிறார்கள். நாம் உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை நேசிக்கிறவர்களாக இருந்தால் மற்றவர்கள் அதைக் குறித்து இழிவாகப் பேசும்போது நாம் அதற்காக நின்று ஆதரவாகப் பேச வேண்டும். தாராளக் கொள்கைகள் தாராளமாய் ஏராளமாய் மலிந்து கிடக்கின்ற இந்நாட்களிலே நாம் அவைகளை நம் முழுபலத்தோடு எதிர்க்க வேண்டும். சிலவேளைகளில் பரிகாசத்திற்குட் படுத்தப்படும்போது நமக்கென்ன என்னும் மனப்போக்குடன் போய் விடுகிறோம். தேவனுடைய வார்த்தை தாக்குதலுக்குள்ளாக்கப்படும் போது, அது தவறாகப் போதிக்கப்படும்போது நாம் அவைகளைக் கடுமையாகக் கடிந்துகொள்ள வேண்டும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதற்கு நமக்கு விஞ்ஞானப்பூர்வமாக சரித்திரப் பூர்வமாக ஆதாரங்கள் உள்ளன. (2 தீமோ. 3:16). எனவே, நாம் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமோ அல்லது வெட்கப்பட வேண்டிய அவசியமோ இல்லை. நாம் தேவனுடைய வார்த்தையை நேசித்தால் அதை நாம் மனதாரப் படிப்போம், தியானிப்போம் என்று இதற்கு முந்தைய தலைப்பில் வாசித்தோம். உலகத்தில் பல வாலிபர்கள் தாங்கள் விரும்பும் அரசியல்வாதிகளுக்காக நடிகர்களுக்காக, விளையாட்டு வீரர் களுக்காக எப்படி வக்காலத்து வாங்குகிறார்கள். தேவனுடைய பிள்ளை களாகிய நாம் ஜீவனுள்ள வார்த்தையை வைத்துக் கொண்டு ஏன் சும்மா இருக்க வேண்டும்? அதே நேரத்தில் நம்மிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து நம்மிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல நாம் எப்பொழுதும் ஆயத்தமா யிருக்க வேண்டும் (1பேதுரு 3:15).

## III நாம் சத்தியத்தை நேசித்தால் அதற்கு கீழ்ப்படிவோம்

சிலரிடம் உரையாடும் போது தாங்கள் சத்தியத்தை அதிகமாக நேசிப்பதாகவும் அதற்காக எதையும் செய்வதாகவும் வீரவசனம் பேசுவார்கள். ஆனால், அதற்கு கீழ்ப்படிவதென்று வரும்போது மெத்தனப்போக்கை கடைபிடிப்பார்கள். நாம் உண்மையாகவே சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதற்கு கீழ்ப்படிய வேண்டும். *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்* என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (யோவான் **14:15**). தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வேத அறிவினால் அறியப் பட வேண்டும். அதைவிட நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் சத்தியத் திற்கு கீழ்ப்படிகிறோம் என்று அறியப்பட வேண்டும். யாக்கோபு ஆசிரியர் இதைப் பற்றிச் சொல்லும் போது " *அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினா லெனில் ஒருவன் திருவசனத்தைக்கேட்டும் அதின்படி செய்யாதவனா னால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்* " என்று சொல்கிறார் (யாக். 1:22-24).

*பிரியமானவர்களே!* சத்தியம் நமக்கு எதைப் போதிக்கிறதோ அதை அப்படியே நாம் செய்கிறவர்களாயிருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். சத்தியத்தை நம் சூழ்நிலைக்கேற்ப திரித்துப் பேசுவதோ, அதை மாறுபாடாகப் பேசுவதோ சத்தியத்தை நேசிப்பவர் களுக்கு ஏற்றதல்ல. அதேபோல் நாம் சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் அதை நாம் பகிர்ந்து கொள்வோம். நாம் சத்தியத்திற்கு கீழ்ப் படியும் போது, சத்தியத்தின்படி நடக்கும்போது தேவனுக்கு கீழ்ப் படிந்து, அவருக்குப் பிரியமானவர்களாயிருப்போம். நாம் சத்தியத்தின் படி நடக்க தீர்மானிக்கும்போது பிசாசானவன் நம் பாதைகளில் பல பாடு களையும், தடைகளையும் கொண்டு வருவான். நாம் அவைகளைப் பொருட்படுத்தாமல், அவைகளைத் தகர்ந்தெறிந்து தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது அதற்கான பலன் இப்பூமியிலும், பரலோகிலும் நமக்கு உண்டு என்பது நிச்சயம்.

*அருமையான வாலிப உள்ளங்களே!* இவ்வுலகில் நாம் திரைகடல் ஓடி திரவிம் தேடுகிறோம். ஆனால், சத்தியத்தைத் தேடுகிறோமா? அதை நாம் நேசிக்கிறோமா? அதை நாம் நேசித்தால் அதை தியானித்துப் படிப்போம். அது தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் போது அதற்கு ஆதரவாக நாம் பேசி நம் அன்பை வெளிப்படுத்துவோம். நாம் சத்தியத்தை உண்மையாக நேசித்தால் அதற்கு நாம் கீழ்ப்படிவோம். நாம் சத்தியத்திற்காக இவைகளைச் செய்யும்போது தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் அபரிதமாக சுதந்தரித்துக் கொள்வோம். தேவன் தாமே அதற்கு கிருபை பாராட்டு வாராக! ஆமென்.




# தாழ்மை

**Dr. ABEL R. NAYAGAM**

எனக்குப் பிரியமான சிறுத்தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாக இருக்கிறீர்கள் என நம்புகிறேன். இந்த மாதமும் இவ்விதழின் வழியாக உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பிள்ளைகளே! சிறுபிள்ளைகளாகிய நாம் நம் எல்லா நடவடிக்கைகளிலும் சரியாக இருக்கவேண்டும். ஏன் தெரியுமா? ஏனென்றால், நம்முடைய நடவடிக்கைகளை தேவன் பார்க்கிறார்; அது மட்டுமல்ல உங்களைச் சுற்றி இருக்கிற உங்கள் நண்பர்களும், உங்களுக்குத் தெரிந்தவர்களும் உங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, நம்மில் நல்ல குணங்கள் மட்டுமே வெளிப்பட வேண்டும்.

சரி, இந்த மாதம், "தாழ்மை" என்னும் குணம் பற்றி கற்றுக்கொள்வோம். தாழ்மையை குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது? யாக்கோபு 4:10ம் வசனம் இப்படியாக சொல்கிறது; கர்த்தருக்கு முன்பாக தாழ்மை படுங்கள்; அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் என்று. அதே அதிகாரம் 6-ம் வசனத்திலே தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார் என்று வாசிக்க முடியும்.

1பேது 5:6ம் வசனத்திலே தாழ்மையுள்ளவர்களை ஏற்ற காலத்திலே தேவன் உயர்த்துவார் என்று வாசிக்கிறோம். எனவே, தாழ்மை என்பது தேவனால் விரும்பப்படும் ஒரு குணமாகும். அப்படியானால், நீங்கள் தாழ்மையாக இருக்கிறீர்களா பிள்ளைகளே! அதே தேவன் பெருமை குணம் உடையவர்களை எப்படியாகப் பார்க்கிறார் தெரியுமா? அதே, 1பேதுரு 5:6ம் வசனத்திலேயும், யாக். 4:6ம் வசனத்திலேயும் நாம் இப்படியாக வாசிக்க முடியும். "பெருமையுள்ளவர்களுக்கோ தேவன் எதிர்த்து நிற்கிறார் " என்று. ஐயோ! பார்த்தீர்களா? நமக்கு பெருமை குணம் இருக்குமானால், தேவன் நம்மை எதிர்க்கிறார். அது நமக்கு நல்லதா? இல்லை. இல்லவே இல்லை. தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமானது என்று வேதம் நமக்கு எச்சரிப்பு தருகிறது. எனவே, நமக்கு பெருமை குணம் இருக்கக்கூடாது. அது தேவனுடைய பார்வையிலே நல்ல குணமாக இல்லை.


ஆம், நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியது தாழ்மை குணத்தை பற்றியும், அதனால் கிடைக்கும் ஆசீர்வாதம் பற்றியும் தான். நமக்கு கிருபையும், ஆசீர்வாதமும் வேண்டுமானால் தாழ்மையாக இருக்க வேண்டும். எனவே, தேவனுடைய பார்வையிலும், நம்மை சுற்றி இருப்பவர்களுக்கு மத்தியிலும் நாம் நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்றால், நமக்கு தாழ்மை குணம் மிக அவசியம். சரிதானே?!

மனப்பாட வசனம் : யாக்கோபு 4:6

# வெரிக்கோஸ் வெயின்ஸ்

## (VERICOSE VEINS)

"**வெ**ரிக்கோஸ் வெயின்ஸ்" என்பது இரத்த குழாய் சம்பந்தமான ஒரு வகை நோய் ஆகும். பொதுவாக, கால்களில் இவை காணப்படும். அநேகரால் கவனம் செலுத்தப்படாமல், பின்பு இதனால் ஏற்படும் மோசமான விளைவுகளினாலே பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். வழக்கமாக, கால்களிலிருந்து இருதயத்திற்கு செல்லும் இரத்த குழாய்கள் சரியான முறையில் இயங்காததினால் இந்த வகை நோய் ஏற்படுகிறது.




### நோயின் அறிகுறிகள்

- கால் வீக்கம்
- தோலில் மாற்றங்கள்
- நீண்ட நாள் குணமாகாமல் இருக்கும் புண்
- கால்களில் எளிதாக வெளியில் தெரியும் இரத்த குழாய்கள்

### என்ன செய்வது?

- மருத்துவரிடம் சென்று இது வெரிக்கோஸ் வெயின்ஸ் நோய் தானா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்
- கால்களில் (பேண்டேஜ்) அறிந்து கொள்ள வேண்டும்
- இதற்கு நிரந்தரமான தீர்வு சிறிய அளவிலான அறுவை சிகிச்சை தான். பாதிக்கப்பட்டவர்கள் முதலமைச்சர் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் இலவசமாக இதை செய்து கொள்ள வாய்ப்புண்டு.


Dr. ஏபில் நாயகம், CMC வேலூர்.

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

**சகோ. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார்**

திருமறை ஆசான் மாதாந்திர பத்திரிக்கை வாயிலாக உங்களோடு தொடர்பு கொள்வதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்களைச் சார்ந்திருக்கிற யாவரையும், உங்கள் வேலைகளையும், வருமானத்தையும் திட்டங்களையும் எதிர்காலங் களையும், அப்பத்தையும் தண்ணீரையும் போக்கையும், வரத்தையும் ஆசீர்வதிப்பாராக!

சென்ற மாதத்தில் "ஏலோயிம்" என்ற பன்மை வார்த்தையும், "ஏலி" என்ற ஒருமை வார்த்தையையும் குறித்துப் பார்த்தோம். இந்த மாதத்தில் பிதாவாகிய தேவனைப்பற்றியும் தேவத்துவத்தில் ஒரே நபர் அல்ல ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர் என்பதைப்பற்றியும் கவனிப் போமாக! வேதாகமத்தில் தேவனுடைய குணாதிசயம், வல்லமை, தன்மையைப் பற்றி கூறும் போது பெரும்பாலும் பிதாவைப்பற்றியே உள்ளது. இதற்காக ஓர் உதாரணத்தை நாம் கவனிப்போம்.

**ஏல்ஷடாய்**

ஆதியாகமம் *17:1*-ல் நாம் வாசிக்கிறோம். தேவனை, சர்வ வல்லமையுள்ள தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வார்த்தை யில் வரக்கூடிய தேவன் என்னும் சொல், மூல பாஷையான எபிரெயு மொழியில் "ஏல்" (ele) என்று எழுதப்பட்டுள்ளது. மேலும், சர்வவல்லமை என்ற வார்த்தை " ஷடாய் " (Shad-dah'ee) (எபிரெய வார்த்தை அகராதி எண் *7706*) என்று உள்ளது. தமிழில் தேவன் என்ற வார்த்தை இரண்டாவதாக சர்வ வல்லமைக்குப் பிறகு வருகிறது. ஆனால், எபிரெய மொழியில் முதல் வார்த்தையாக *தேவன் சர்வ வல்லமையுள்ளவர்* (ஏல்ஷடாய்) என்று எழுதப்பட்டுள்ளது. இப்படி பெரும்பாலும் பழைய ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனையே முதன்மைபடுத்தி எழுதப்பட்டுள்ளது.

**ஏல் எல்லோன்**

அதேபோல இன்னொரு வார்த்தையை கவனிப்போம்; ஆதியாகமம் *14:18,19*-ம் வசனங்களில் தேவனை "*உன்னதமான தேவன்*" என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த உன்னதமான தேவன் என்னும் வார்த்தையில் வரக்கூடிய தேவன் என்னும் சொல் நாம் சென்ற மாதத்தில் கவனித்த எபிரெய அகராதியின் *410* எண்ணுள்ள ஒருவரைக் குறிக்கும் வார்த்தையே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உன்னத தேவன் என்றால் உன்னதத்தில் அதாவது மோட்சத்தில் (பரலோகத்தில்) வாசமாயிருக்கும் தேவன் என்பதும் அர்த்தம் ஆகலாம். ஆனால், மூல

பாஷையான எபிரெய மொழியில் உன்னதம் என்பதற்கு (Elyown, உச்சரிப்பு : el-yone எபிரெய அகராதி எண் : 5945) எல்லாரையும் விட, எல்லாவற்றையும் விட உயர்ந்தவர் என்று பொருள். ஆங்கிலத்தில் இந்த வார்த்தைக்கு இலக்கணரீதியாக (Most High) என்று சரியாக எழுதப் பட்டுள்ளது. இதன் அர்த்தம் அவரைவிட பெரியவர் யாருமில்லை என்பது ஆகும்.

ஆகையால் தான், அவர் ஆபிரகாமுக்கு ஆணையிடும்போது ஆதி. 22:18 ல் " நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார் " அவரை விட பெரியவர் யாரும் இல்லாததால் எப்போதும் தங்களைவிட பெரியவர்கள் பெயரில் ஆணையிட்டு உறுதி செய்வார்கள் என்பது நமக்குத்தெரியும். இதை பரிசுத்த ஆவியானவரும் உறுதி செய்கிறார். "ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணை யிட்டு நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப் பண்ணுவேன் " என்றார் (எபி. 6:13, 14)

இதை நமது ஆண்டவராகிய இயேசுவானவரும் உறுதி செய்கிறார். யோவான் 14:28-ல் இயேசுவானவர் சொல்கிறார். ஏனெனில், என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் என்றார். இயேசுவானவர் இப்படிச் சொல்லவில்லை நான் பிதாவாயிருந்தேன் அப்பொழுது பெரியவரா யிருந்தேன், இப்போது மனுஷ குமாரனாக வந்தேன். ஆகையால், அந்தச் சூழ்நிலை இப்பொழுது இருக்கிற சூழ்நிலையை விட பெரிய சூழ்நிலை என்று சொல்லவில்லை. இயேசுவானவர் தெளிவாக சொல்லுகிறார். என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். ஆகவே, பிதாவானவர் எல்லாரையும் விட, ஏன் இயேசு கிறிஸ்துவையும் விட உன்னதமான வராகத்தான் இன்றைக்கும் இருக்கிறார். இயேசுவானவர் நம்மெல்லா ரையும் விட தேவ தூதரையும் விட மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்த வராக (Most High) ஆக இருக்கிறார். ஆனால், பிதாவுக்கு அடுத்து, அதாவது அருகில் இருக்கிறார். ஆகையால், இருவரும் ஒரே நபர் அல்ல, வெவ்வேறானவர்கள் ஒரே தேவத்துத்துவமாக இருக்கிறார்கள்.

## ஏல் டிசூர்

ஆனால், கன்மலையாகிய தேவன் என்கிறபோது, சில இடங்களில் எபிரெய வார்த்தை அகராதியில் 430 எண்ணுள்ள ஏலோயீம் என்ற வார்த்தையுடன் வருகிறது. ஏனென்றால், தேவனுடன் கிறிஸ்துவும் கன்மலையாக பழைய ஏற்பாட்டில் மறைமுகமாக சொல்லப்படுகிறார். புதிய ஏற்பாட்டில் விவாதிக்கப்படுகிறார், 1கொரி. 10:4. அந்தக் கன்மலை கிறிஸ்துவே. சாமுவேல் 22:47-ல் எழுதப்பட்டுள்ள கன்மலை யாகிய தேவன் என்ற வாக்கியத்தில் வரக்கூடிய தேவன் என்னும் வார்த்தை மூல பாஷையில் " ஏலோயீம் " என எழுதப்பட்டுள்ளது. ஆகையால், பழைய ஏற்பாட்டில் பிதாவானவர் கன்மலையாக "ஏல் டிசூர் " ஆக

சொல்லப்பட்டது போது பிதாவும், கிறிஸ்துவும் இருவருமே கன்மலையாக "ஏலோயீம் டிசூர்" ஆக சொல்லப்பட்டிருக்கிறார்கள். இருவரும் இரண்டு கன்மலைகள் என்ற அர்த்தம் அல்ல, ஒரே கன்மலை. அதாவது, தேவ அல்லது தெய்வீகக் கன்மலை என்பது ஆகும்.

தேவன் சொன்னார்; *"நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..."* என்றார். ஆதி. 1:26 இந்த வசனத்தில் தேவன் நமது என்ற வார்த்தையை இரண்டு முறை பயன்படுத்தியிருக்கிறார். அப்பொழுது மனிதர்கள் யாரையும் அவர் படைக்கவில்லை. படைக்கும் திட்டத்தைப் பேசுகிறார். அவர் தேவ தூதரை படைப்புக்கு உடன் இருக்கும்படி அழைக்கவில்லை. ஏனென்றால், தேவ தூதர்கள் படைப்பிலே தேவனோடு பங்கு பெற்றார்கள் என்று தேவன் தம் வார்த்தைகளில் எங்கும் கூறவில்லை. அப்படியானால் அவர் யாரிடத்தில் பேசினார். யோவான். 1:1-3 வசனங்களில் *ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை "* என்கிற வசனங்களில் நமது கேள்வி என்னவென்றால் இந்த வசனங்கள் ஒரே நபரைப் பற்றி சொல்கிறதா அல்லது இரண்டு நபர்களைப்பற்றி சொல்கிறதா என்பதுதான். நிச்சயமாக வசன ரீதியாகவும் இலக்கண ரீதியாகவும் இரண்டு நபர் களைப்பற்றிதான் பேசுகிறது.

தேவத்துவத்தில் ஒரேயொரு நபர் மட்டுமே இருந்தால் அவர் நமது சாயலாக என்று ஏன் சொல்ல வேண்டும்?. அதற்குப் பதிலாக தேவன் ஆதியாகமம் 1:26 ல் மனிதர்களுக்கு சிருஷ்டிப்பின் தன்மையைப் பற்றி சொல்ல வேண்டுமானால் இப்படிச் சொல்லியிருப்பார். பின்பு தேவன் நான் எனது சாயலாகவும், எனது ரூபத்தின்படியேயும் மனித னைப் படைத்தேன் என்று சொல்லிருப்பாரே. தேவன் சகல வல்லமை, ஞானம் போன்ற அனைத்தும் உள்ளவர். அப்படிப்பட்டவர், ஏன் ஆதியாகமம் 1:26-ல் நமது என்ற வார்த்தையைச் சொல்லியிருக்க வேண்டும். தேவன் உண்மையுள்ளவர் சத்தியமுள்ளவர். இதில் பொய் சொல்லுவாரா என்பதைக் கவனிக்க வேண்டும். இதை விளக்கும்படி தான் யோவான் 1:1-3 வசனங்களை நாம் கவனித்தோம். இந்த வசனங் களும் சிருஷ்டிப்பையே சுட்டிக் காட்டுகிறது. சிருஷ்டிப்பிற்கு முந்தைய தெய்வீகத்தின் சூழ்நிலையையயும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், 1 கொரிந்தியர் 8:6 ம் வசனத்திலும் பிதாவானவர் தனக்காக எல்லா வற்றையும் படைத்தார். அதேநேரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் எல்லாவற்றையும் படைத்தார் என்று பரிசுத்த ஆவியானவர் தெளிவுபடுத்துகிறார். பழைய ஏற்பாடு சொல்லாத, விளக்காத அநேக கருத்துக்களை புதிய ஏற்பாடு விளக்குகிறதை நாம் பார்க்கிறோம். மேலும், புதிய ஏற்பாட்டை இன்னும் அதிகமாக விவாதிக்கும்படி புரிந்து கொள்ளும்படி பழைய ஏற்பாட்டின் சரித்திரம், நிகழ்வுகள், தீர்க்கதரிசனங்கள், வசனங்கள் போன்றவை நமக்கு உதவுகிறது என்பது நமக்குத் தெரியும். ஆகையால், நாம் சொல்கிறோம். தேவத்துவத்தில் மூவர், அதாவது மூன்று நபர்கள் பிதா, வார்த்தை,

பரிசுத்த ஆவி ஆகியோர் உள்ளனர். இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். இதில் கடைசி வார்த்தையாகிய "ஒன்றாயிருக்கிறார்கள்" என்ற வார்த்தை யைக் கவனிக்க வேண்டும் "ஒன்றாயிருக்கிறார்" அல்ல, ஒன்றாயிருக் கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆதியாகமம் *1:26*ஐ இன்னொரு வசனமும் ஆதரிக்கிறது. எந்த வசனம் என்றால் ஆதியாகமம் *11:7* இந்த வசனத்தில் கர்த்தர் சொல்லு கிறார், *"நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாத படிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்"* என்றார். வேதாகமத்தில் இது ஒரு முக்கியமான சூழ்நிலை. மனிதர்களுடைய நிலைமை மாறிப்போன சூழ்நிலை. மனிதர்கள் அனைவரும் பூமியில் ஒரே இடத்தில் வாழ முற்பட்டார்கள். ஆனால், கர்த்தர் அவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். அதற்காக அவர் கையாண்ட விதம் வியப்பானது. அதுவரை அவர்கள் ஒரே பாஷை பேசி வந்தார்கள். அவர்களுக்குப் பல பாஷைகளை ஏற்படுத்தியதால் அவர்கள் ஒற்றுமையாக ஒரே இடத்தில் இருகக் முடியாமல் பூமியின் மீதெங்கும் சிதறிப்போனார்கள். இந்த நிகழ்ச்சி ஆதி. *11:1-9* வசனங்களில் வருகிறது.

நம்முடைய கருத்து இதுவல்ல. ஆதி.*11:7*ல் கர்த்தர் "நாம் இறங்கிப் போய்" என்று சொல்லுகிறார். வேத வார்த்தைகள் தேவனு டைய வார்த்தைகள் என்று நாம் நம்புகிறோம். இங்கே கர்த்தர் என்ற வார்த்தை *11:1-9* வசனங்களில் *5* முறை எழுதப்பட்டுள்ளது. இந்த கர்த்தர் என்பதற்கு மூல பாஷையான எபிரெய மொழியில் Yehovah (யெகோவா) என்று எழுதப்பட்டுள்ளது. இந்த வார்த்தையில் எபிரெய அகராதி எண் *3068* ஆகும். இந்த வார்த்தையை Yeh-hov-ah யாஹோவா என்று உச்சரிக்க வேண்டும். யூதர்கள் "யாவே" என்றும் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைக்கு அர்த்தம் தேடினால் எபிரெய அகராதியின் *136* மற்றும் *113* எண்ணுள்ள வார்த்தைகள் விளக்கம் அளிக்கிறது. *136* எண் வார்த்தை, இதை என்று உச்சரிக்கவேண்டும், *113* எண் வார்த்தை,என்று உச்சரிக்க வேண்டும். இவைகளின் பொருள் என்னவென்றால் *1. Adony,* இதை *"aw-done"* ஆள்பவர் (அரசன்); *2. Sovereign* சர்வ சுதந்திரமுள்ள ஆளுநர் (அரசர்); *3.* அடக்கி நடத்துபவர் அல்லது ஒழுங்கு செய்பவர்; *4. Master* அதிகாரி, எஜமான், *Controller* தலைவர்; *5. Owner* சொந்தகாரர் அல்லது உரிமையாளர்.

தேவன் இந்த உலகத்தைப் படைத்தார், மனிதனைப் படைத்தார் அவர்தான் ஆள்பவர், சர்வசுதந்திரவாளி, நடத்துனர், அதிகாரி, எஜமான், சொந்தக்காரர். இப்படி இருக்கும்போது ஏன் அவர் ஒரேயொரு நபராக இருந்தால் ஏன் மற்றவரைத் தன்னுடன் அழைக்க வேண்டும்?. அப்படி அழைத்திருக்கிறார் என்றால் இதே குணம், வல்லமை, தன்மை கொண்ட ஒருவரைத்தான் அவர் அழைத்திருக்க வேண்டுமே தவிர, தேவ தூதர் களையோ அல்லது மனிதர்களையோ அல்லது சாத்தானையோ அவர் அழைத்திருக்க வாய்ப்பில்லை. ஆகவே, வார்த்தையாகிய, அந்த வார்த்தை மாம்சமாகி வந்த இயேசு கிறிஸ்துவைதான் அவர் அழைத்திருக்க வேண்டும். இந்த ஆதியாகமம் *11:1-9* வசனங்களில் வரும் " நாம்" என்ற

வார்த்தைக்கு ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள், பாஷையை தாறுமாறாக்கினார்கள் என்பது தான் விளக்கம். அந்த ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள், யார் என்றால் பிதா, வார்த்தை பரிசுத்த ஆவி ஆகிய மூவர் தான்.

அநேகர் ஏசாயா *9:6* -ஐ சுட்டிக்காட்டி, மேசியா அதாவது இயேசு கிறிஸ்துவை பற்றின தீர்க்கதரிசனத்தில் அவரை நித்திய பிதா என்று சொல்லியிருக்கிறதே. ஆகையால், கிறிஸ்துதான் பிதாவாக இருந்தார். பிறகு குமாரனாக, இயேசு கிறிஸ்துவாக பூமியில் வந்தார் என்கிறார்கள். இதற்காக அவர்கள் *1* தீமோத். *3:15*-ல் சொல்லப்பட்டுள்ள "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்". என்ற வசனத்தை ஆதாரமாக சொல்கிறார்கள். இவைகளும் வேத வசனங்கள் தான், தேவனுடைய வார்த்தை தான் பொய்யல்ல, அந்தக் கருத்து நிஜம் தான். ஆனால், ஏன் மேசியாவை அதாவது, குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பரிசுத்த ஆவியானவர் நித்திய பிதா என்கிறார், புதிய ஏற்பாட்டில் தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என்கிறார், இவைகளுடைய விளக்கங்கள் என்ன என்பதை நாம் தொடர்ந்து கவனிக்க வேண்டும். ஒரு கருத்தை நாம் திட்டமாக மனதில் கொள்ள வேண்டும்; வேதாகமம் தனக்குத் தானே முரண்படாது அல்லது தேவன் முரண்பாடாக பேசுகிறவருமல்ல, மக்களை வழி நடத்துகிறவருமல்ல, அவர் ஞானமுள்ள தேவன். ஞானத்தைதான் மக்களுக்கு வேத வசனங்களாக சொல்லியிருக்கிறார். அவருடைய ஞானத்தின்படி தான் உபதேசங்களும் அமைந்துள்ளது. ஒருவர் தவறான உபதேசத்தை உபதேசித்து, கடைப்பிடித்து, போதிப்பவராயிருந்தால் அவர் தன்னை மட்டுமல்ல அநேகரையும் தவறான பாதையில் நடத்துகிறவராயிருப்பார். இதில் ஆண், பெண் வித்தியாசம் இல்லை.

பரலோகத்தின் தேவன் தாமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பரலோகத்தின் ஆசீர்வாதங்களினாலும் பூலோகத்தின் ஆசீர்வாதங்களினாலும் ஆசிர்வதிப்பாராக. ஆமென்!

தொடர்புக்கு : *09383151616*

## ஏன் நீங்கள் ஆராதனைக்குப் போவதில்லை

- ❋ அதிகமான வேலைப் பளுவா? எபி. 9:27 ஐ வாசிக்கவும்
- ❋ எல்லாரும் மாய்மாலக்காரர்களா? வெளி. 3:14 ஐ வாசிக்கவும்
- ❋ அதிகமான களைப்பா? மத். 11:28 ஐ வாசிக்கவும்
- ❋ நல்ல ஆடைகள் இல்லையா? யாக். 2:1-5 ஐ வாசிக்கவும்
- ❋ உங்களைக் காயப்படுத்தி விட்டார்களா? மத். 6:12 ஐ வாசிக்கவும்
- ❋ பிரபலமான சபையாக இல்லையா? மத்.7:4, 13, 14 ஐவாசிக்கவும்
- ❋ மழை/வெயில் பிரச்சனையா? ரோமர் 8:35 ஐ வாசிக்கவும்
- ❋ போக விருப்பமில்லையா? எபி. 4:1 ஐ வாசிக்கவும்

# நவீன போதகர்

Bro. W.A. ஹேரால்

இக்காலத்திய போதகர் ஒரு விசித்திரப் பிறவி! உறுதியாவனர், தைரியசாலி என மக்களின் பாராட்டைப் பெற அவர் விரும்புகிறார். ஆனால், உண்மையைச் சொன்னால், நீதிநெறி, சமய சார்பு சம்பந்தமான காரியங்களில் அவர் ஒரு படு கோழை, தேவன் பேரிலும், மக்களிடத்திலும் அவர் கொண்டுள்ள அளவற்ற அன்பு பற்றி எல்லோரிடமும் பீற்றிக் கொள்ளத் தவறுவதில்லை, ஆனால், அவர் செயல்பாடுகளோ அவரை ஒரு கள்ளப் போதகர் என தோலுரித்துக் காட்டுகிறது. (கலா. *1:6-10*).

இந்த நவீன போதகர், தன் செவிகளைத் தாழ்த்தி, கூர்மையாக்கி மக்கள் எதைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, மக்கள் கூட்டம் மகிழ்ச்சி அடையும் விதத்தில் போதிக்கிறார்கள். வேதாகமத்தை நீட்டியோ, சுருக்கியோ, மாற்றியோ எப்படி வேண்டுமானாலும் செப்பிடு வித்தை செய்து போதிக்கும் கலையில் வல்லவர் இவர்! பலதரப்பட்ட போதகர்கள், மாறுபாடான சபை பிரிவுகளிலே, மாறுபட்ட செய்திகளை அளித்து வருகிறார்களே அதற்குக் காரணம் இது தான். (எரேமியா *5:30-31; 23;26.32*).

புதிய ஏற்பாட்டின் தொடக்க காலத்திலே எல்லா நற்செய்தி போதகர்களும் ஒரே காரியத்தைப் போதித்தார்கள். பேதுரு ஒரு சுவிசேஷத்தையும், பவுல் வேறொரு சுவிசேஷத்தையும் போதிக்கவில்லை. *"உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறெரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டனாயிருக்கக்கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்கிறோன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்". (கலா. 1:6-9).*

சுவிசேஷம் ஒன்றாகவே இருந்தபோதிலும், நாமகரணக் கூட்டங்கள் மாறுபாடான பலவற்றைப் போதிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் போதகர்கள் எல்லோருமே பரிசுத்தமும் எளிமையுமான

ஒரே சத்தியத்தைப் போதித்தார்கள். அவர்களுடைய போதனைகள், நிரந்தரமான வித்தியாசப்பட்ட சபை பிரிவுகளைத் தோற்றுவிப்பதில் போய் முடியவில்லை. ஒரே சபையாக செயல்பட்டு வந்தனர். (1 பேதுரு 4:11; வெளி. 22:18-19)

தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆகி விடுவானா? வேதாகமத்தை கையில் வைத்துக் கொண்டு, போதகர்கள் என வெளியில் கிளம்பிவிடும் எல்லா போதகர்களையும் நம்ப வேண்டுமென வேதாகமம் கூறவில்லை. (1 யோவான் 4:1) அவர்கள் போதிப்பது தேவனுடைய வார்த்தையைத்தானா என ஒவ்வொரு நாணயமான மனிதனும் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். (அப். 17:11). அப்பொல்லோ சாதுரிய வானும் வேதாகமங்களில் வல்லவனுமான மனிதனாக விளங்கிய போதிலும் முழு சத்தியத்தையும் அவன் அறிந்திருக்கவில்லை. (அப். 18:24-28). நல்ல வேளையாக, அவனுடைய தவறை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் புரிந்து கொண்டு, *"தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் "*. எனவே, இக்காலத்திலே ஆயிரக்கணக்கான போதகர்கள் தேவனுடைய சத்தியத் தைக் கற்றுத் தெளிவு பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நிறையப் படித்து, பட்டங்கள் பெற்று, மிகவும் செல்வாக்கான போதகராக ஒருவர் இருப்பதால் மட்டுமே, அவர் சுவிசேஷத்தின் சத்தியங்கள் யாவற்றையும் அறிந்தவர் என எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அல்லது, இன்று நிறையபேர் நாமகரணக் கூட்டத்தைச் சார்ந்த போதகர் களாக இருப்பதும், மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குடன் அவர்கள் வலம் வருவதும், எல்லாம் வல்ல தேவனுடைய பார்வையில் அவர்களைச் சத்தியவந்தர்களாக்கி விடாது. 2 நாளாகமம் 18:4-34 வசனங்கள் சித்தரிக்கும் காரியத்தைக் கவனியுங்கள்: தேவனுக்கு முன்பாக 400 தீர்க்கத்தரிசிகள் தவறானவர்களாகவும், **ஒரே ஒருவர்** மட்டுமே சரியான தீர்க்கத்தரிசியாகவும் காணப்பட்டார். போதகர்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள ஒரே பாதுகாப்பான வழி, அவர்கள் சத்தியத்தைப் போதிக்கிறார்களா அல்லது (ஏ)மாற்றுகிறார்களா என அறிவதே (2 தீமோ. 4:2; அப். 17:11;1 பேதுரு 4:11). வசனத்தைப் போதிக்காத எவரும் சத்தியத்தைப் போதிக்க இயலாது.

**எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொண்டு ஏமாந்து போகத்தயார்!**

என்ற வாசகம் நமது நெற்றியில் கொட்டை எழுத்துக்களில் ஒட்டி யிருப்பதைத் தனது அலைபாயும் கண்களால் நோட்டம் விட்டுத் தெரிந்து கொள்ளும் நவீன போதகர், நம்மை அணுகும் முறை எப்படித் தெரியுமா?.

பவ்யமாக நம்மிடம் அவர் வருகிறார். தேவன் இவரைத் தேடி வந்த விதம் பற்றி ஒரு கதை விடுகிறார். அடுத்து, தனது சத்திய வசனங்களிலே

காணப்படாத ஒரு புதுச்செய்தியை, தேவன் இவருக்கென்றே கொண்டு வந்து இவருடைய இருதயத்திலே பதியவைத்துச் சென்ற கதையைப் பய பக்தியுடன் வர்ணிக்கிறார்; தொடர்ந்து, மனித இரட்சிப்புக்காக தேவன் இவரிடம் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டு வரும் புதுப்புதுச் செய்திகளைப் பற்றி விலாவாரியாக அலசுகிறார். இவை யாவற்றையும் கேட்டுக்கொண்டு, மெய் சிலிர்த்துப் போய், வாய்க்குள் சென்று வெளி வரும் ஈ பற்றிய உணர்வு எதுவுமின்றி, பித்து பிடித்ததுபோல நாம் விழி பிதுங்க அமர்ந்திருப்பது, நமது நவீன போதகருக்கு மேலும் போதை ஏற்றிவிட, உற்சாகமாக கதையைத் தொடருகிறார். வேதாகமம் மட்டும் பத்தாதுங்க; அதனால் தான் ஆவியானவர் அடிக்கடி வந்து புதுப்புது சங்கதிகளை என் இருதயத்திலே பதிய வைச்சுட்டுப் போறாரு. வேதாகமத்தை ஊறுகாய் மாதிரி வைச்சுக்க வேண்டியதுதான். மத்த காரியத்தை எல்லாம் ஆவியானவர் அவ்வப்போது சொல்கிற மாதிரி செய்ய வேண்டியது தான். இதெல்லாம் உங்களுக்கு எடுத்துச் சொல்றது தான் என்னுடைய வேலை. ஆத்துமாவுக்குள் அடைத்துவிட்ட திருப்தி யுடன், மறக்காமல் நமது சட்டைப் பையைத் தடவி அங்குள்ள சில்லறை முழுவதையும் அள்ளிக் கொண்டு, அடுத்த ஆத்துமாவை கரை சேர்க்கப் புறப்பட்டுப் போகிறார் நமது நவீன போதகர்!

இப்படிப்பட்ட போதகர்களில் பலர் வேதாகமத்தை, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை, முற்றிலுமாக ஒருபோதும் படித் திருக்கப் போவதில்லை. வேதாகம புத்தகம் கூட அவர்களிடம் இருப்ப தில்லை. அவர்களுடைய போதனைக்கு அது தேவையும் அல்லவே! அமெரிக்க நாட்டு ஹார்வேட் வேதகாமக் கல்லூரியில் பட்டம் பெறப் போகும் ஒரு மாணவன் தனது சகமாணவனிடம் கூறினான். “ஐயையோ தேர்வுக்கு வேதாகமத்திலிருந்து கேள்விகள் கேட்பார்கள் போல் தெரிகிறதே. நான் அவசரமாய் போய் ஒரு பைபிள் வாங்கி வருகிறேன், செந்தமாக இதுவரை என்னிடம் ஒரு பைபிளும் இல்லை என்றான்”. சொந்தமாக ஒரு வேதாகமப் புத்தகம் இன்றி, வேதாகமக் கல்லூரியில் பட்டமும் பெற்று போதகராகப் போகிறான் ஒரு மாணவன்! அவன் எதைப் போதிக்கப் போகிறான்?

இவர்கள் குருடர்களின் குருட்டுத்தலைவர்களாயிருக்கின்றனர் **(மத் 15:13-14)**. இவர்கள் வேதகாமத்தை பற்றிய ஞானம் எதுவு மில்லாதவர்கள், தத்துவம் இவர்களுக்குத் தண்ணீர் பட்டபாடு; மனோ தத்துவத்திலே மன்னர்கள்; இவர்களின் சரித்திர அறிவோ சமுத்திர ஆழத்தையும் மிஞ்சும்; விஞ்ஞானத்திலே பெரிய புலிகள் வேதாகம படிப்பிலோ இந்த நவீன போதகர்கள் வெறும் எல்.கே.ஜி தான்!

சத்திய வசனங்களையே நம்பாத, மெத்தப்படித்த பல போதகர்கள் நாமகரணக் கூட்டங்களின் பெரிய ஆலயங்களிலே பிரசங்கங்கள் செய்து கொண்டு இருக்கின்றனர். தேவனையே நம்பாதவர்கள் எதைப் போதிக்கப்போகிறார்கள்?

இந்த நவீன போதகர்கள் கற்ற சமயக் கோட்பாடுகளுக்கு ஒத்து வரும் வசனங்களை மட்டும் வேதாகமத்திலிருந்து எடுத்துக் கொண்டு, மற்ற சத்திய வசனங்களை ஒதுக்கி விடுகின்றனர். உதாரணமாக: தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் (மாற்கு 16:16; அப். 2:36-38); தேவனுடைய ஆராதனையின் திட்டம் (அப். 2:42; எபே. 2:119; யோவான் 4:23-24); இயேசுவின் இறைத்தன்மை; கன்னியிடமிருந்து பிறந்தது; அவர் செய்த அற்புதங்கள்; அவருடைய மரணம்; உயிர்ப்பு.

இந்த **(போதகர்கள்)** பிரகடனப்படுத்தியுள்ள நவீன மதச் சடங்குகள் பல உண்டு. கிருபையால் மட்டுமே இரட்சிப்பு; விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்பு; ஜெபத்தினால் மட்டுமே இரட்சிப்பு (எபே. 2:36-38; 22:16; ரோமர் 6:3-4; 1 பேதுரு 3:21).

இதே நவீன போதகர்கள்தான் கிறிஸ்துவின் சபை தேவையற்ற ஒன்று என்றும் (அப். 20:28; எபே. 1:22-23; கெலோ. 1:18, 23-24); இயேசு கட்டளையிட்ட திருமுழுக்கு மனித இரட்சிப்புக்கு தேவையற்றது என்றும் (மத். 28:18-20; மாற்கு 16:15-16; அப். 2:36-38,41,47); எல்லா சபைகளும் ஒன்றே; விரும்பும் சபையில் அங்கள் வகிக்கலாம் என்றும், இன்னும் எண்ணற்ற தவறான தங்கள் கண்டுபிடிப்புகளைப் போதித்து, மக்களைக் குழப்பிக் கொண்டு வருகிறார்கள்.

இந்த நவீனங்கள் போற்றிப் பாதுகாக்கும் எந்த போதனையையும் இயேசுவோ, அபபோஸ்தலர் பவுலோ, அல்லது பேதுருவோ அல்லது வேறு எந்த அப்போஸ்தலரோ ஒருபோதும் போதிக்கவில்லை என்பதை மிகவும் பணிவுடன் கூறிக்கொள்கிறோம்.

அன்பான வாசகரே! இந்த நவீன போதகர்கள் இப்போது போதித்து வரும் காரியங்கள் வேதாகாமத்தில் எங்கு இடம் பெற்றுள்ளன என்பது உங்களுக்குத் தெரிந்தால், அந்த வசனங்களைக் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதுவீர்களா?.

## நாளும், நடப்பும்

1. ப்ளஸ் 2 பொதுத் தேர்வுகள் மார்ச் 5 முதல் 31 வரையில் நடைபெறும். – அரசு தேர்வுகள் இயக்ககம்.
2. ரயில் கட்டணங்களை இப்போதைக்கு உயர்த்தும் திட்டமில்லை – ரயில்வே அமைச்சர்.
3. தலைநகர் தில்லியில் சில கிறிஸ்தவ தேவாலயங்களில் கடந்த சில மாதங்களாக மர்ம நபர்கள் தாக்குதலை எதிர்த்து பல்வேறு இடங்களில் போராட்டங்கள்.
4. நிகழாண்டில் பத்தாயிரம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் – TNPSC
5. வருமான வரி ஏய்ப்புக்கு 7 ஆண்டுகள் சிறை – மத்திய அரசு.
6. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித்தொடர் பிப்ரவரி 14 முதல் மார்ச் 29 வரை நடைபெறும்.
7. உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரை வெற்றியுடன் தொடங்கியது இந்தியா.

# வேதாகமம் விடுக்கும் எச்சரிக்கைகள்

Bro. ஹோவெல் பிக்காம்

**கா**யீன், லோத்துவின் மனைவி, ஊசா ஆகிய பெயர்களெல்லாம் தேவனுடைய எச்சரிக்கைகளை நமக்கு நினைவூட்டுபவைகளாயிருக்கின்றன. தேவனுக்கு அவர்கள் கீழ்ப்படியாமல் போனதின் விளைவே இவர்கள் சீரழிவுக்குக் காரணம். அவைகள் நமக்குப் போதனைகளாகவும், எச்சரிப்புகளாகவும், எழுதப்பட்டிருக்கின்றன. *“தேவ வனசத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது ” என அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார்.* (ரோமர் *15:4*)

தேவனுடைய கட்டளைகளின்படியே எல்லா காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென காயீனுடைய வரலாறு நம்மை எச்சரிக்கிறது. (ஆதி *4:5,7;*ரோமர் *10:17)* சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்ட நாம் (ரோமர் ***1:16;*** 1பேதுரு ***1-18,19***), பாவ உலகைத் திரும்பிப் பார்க்கலாகாது. (லூக்கா ***9:62***) என லோத்துவுடைய மனைவியின் செயல் நம்மை எச்சரிக்கிறது. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் கவனக் குறைவை எந்தச் சூழ்நிலையிலும் சகித்துக் கொள்ளமாட்டார் (2 சாமுவேல் *6:1-7*) என்ற கண்டிப்பான பாடத்தை ஊசாவின் காரியம் நமக்கு உணர்த்துகிறது. எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடங்களை மேற்சொன்ன மூன்று பேர் மூலமாக தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

அதல்லாமல், பழைய ஏற்பாட்டில் காணும் வேறு மூன்று நபர்கள் வழியாக நாம் அடையும் எச்சரிக்கைகள் பற்றியும் இங்கு கவனிப்போம். அவர்களுடைய செயல்கள், கீழ்க்கண்ட எச்சரிக்கையை எல்லா மக்களுக்கும் எதிரொலித்துக் காட்டுகிறது.

### யெகோவாவின் ஆசீர்வாதமான வார்த்தையை மதித்து நட

நண்பர்களே! நோவா, சவுல் அரசன், நாதாப், அபியூ ஆகியோர் மூலம் நமக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளைப் பார்ப்போம்.

*“தேவனுடைய வார்த்தையோடு எதையும் சேர்க்காதே என்பது நோவா தரும் எச்சரிக்கை. விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளி”* எனக் (எபி. *11*) குறிப்பிட்டுள்ள முதிர்வயான நோவாவுக்கு, நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என கட்டளையிடப்பட்டது. இந்த நீதியும், உத்தமனுமான மனிதனுக்கு (வசனம் *9)* பாதுகாப்பான அந்தப் பேழையைக் கட்ட வேண்டிய சரியான விதமும், அளவுகளும் கொடுக்கப்பட்டன. (வசனம் *14-16*) தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் நோவா தேர்வு பெற்றாரா? இதோ

வேதாகமம் தரும் பதில்; நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான் (வசனம் 22) கொப்பேர் மரத்தால ஒரு பேழையைக் கட்ட தேவன் கட்டளையிட்டபோது கொப்பேர் மரத்தோடு வேறு மரத்தையும் இணைத்தோ, அல்லது முற்றிலும் வேறுபட்ட ஒரு மரத்தையோ பயன் படுத்தி அந்தப் பேழையை கட்டியிருந்தால் தேவனுடைய கட்டளையை நோவா மீறியிருப்பார் அல்லவா? நமது வானகத் தந்தையின் யோசனை யோடு தன்னுடையதையும் சேர்த்த குற்றத்தைப் புரிந்தவராயிருப்பாரே! நோவாவின் செயல் பற்றி இன்று மக்கள் கற்று, சிந்திக்க வேண்டியவர் களாயிருக்கின்றனர். உதாரணமாக ஆராதனையில் வாத்திய இசைக் கருவிகளை உபயோகிப்பது புதிய ஏற்பாட்டு பிரமாணங்களில் சொல்லப்படவில்லை. நமது இருதயத்திலிருந்து கர்த்தரை பாட வேண்டுமென புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. (எபே. 5:19; கொலே. 3:17) இயேசுவின் அன்பிற்குப் பாத்திரமான அப்போஸ்தலன் யோவான் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, கீழ்க்கண்டவாறு எச்சரிக் கிறார்..... *"ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவர்"* (வெளி. 22:18) ஆம், நோவா திட்டவட்டமாக நமக்குத் தெரியப்படுத்தும் செய்தி: தேவனுடைய கட்டளையைக் கூட்டாமல், மாற்றாமல் அப்படியே கைக்கொள்ள வேண்டும், என்பதாகும்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து எதையாவது குறைப்பதோ, திருத்துவதோ, குற்றம். இதை நமக்கு உணர்த்த, தேவன் சவுல் அரசன் மூலமாக ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையை விடுக்கிறார். அந்த இஸ்ர வேலரின் அரசனிடம் *"இப்போதும் நீ போய், அமலேக்கை மடங் கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும் ஸ்திரீகளையும், பிள்ளை களையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங் களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என சாமுவேல் மூலமாகக் கட்டளையிடப்பட்டது".* (I சாமு. 15:3) முற்றிலுமாக அழித்துப் போடும்படி சவுல் அசரனுக்கு கட்டளையிடப்பட்டது! ஆனாலும், பரிசுத்த வேதாகமம் கூறுகிறது; *"சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடு மாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவை களையும் ஆட்டுக் குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான் என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்".* (I சாமு. 15.9) ஆகாகையும் பிற பொருட்களையும் தப்பவைத்ததின் மூலம் சவுல் தேவனுடைய வார்த்தைக்கு முற்றுலுமாகக் கீழ்ப்படியவில்லை. சகல வற்றையும் அழிக்கச்சொன்ன தேவனுடைய கட்டளையிலிருந்து ஒரு பகுதியை அவன் எடுத்துப் போட்டதாக முதிர் வயதான தீர்க்கதரிசி சாமுவேல், சவுல் அரசனைக் கண்டித்து *"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும்*

*கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப் படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத் தலும் உத்தமம்"* (வசனம் 22) எனக் கூறுகிறார். எனவே, தேவனுடைய கட்டளையை அலட்சியம் செய்து, தன் இஷ்டம் போல் செய்த சவுலுக்கு நேர்ந்த கதி நமக்கு விடுக்கும் பலத்த எச்சரிக்கை. (சாமு. 15:23) ஆகவே, நண்பனே *"தேவனுடைய கட்டளைகளிலிருந்து எதையும் எடுத்துப் போடாதே"*.

சவுலைப் போல, யெகோவாவின் சட்டத்திலிருந்து எதையாவது எடுத்துப்போடும் குற்றத்தை, இன்று பல சந்தர்ப்பங்களில் மக்கள் செய்து வருகிறார்கள். கர்த்தரின் பந்தி பற்றிய ஆலோசனையை சிலர் தங்கள் மனம் போல மாற்றிக் கொள்கின்றனர். வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரின் நினைவாகப் பங்கு பெறுவதை விடுத்து (அப். 20:7), சிலர் 3 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது வருடத்தில் ஒன்று, இரண்டு முறை மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால் போதுமென்கின்றனர்! இத்தகைய குற்றம் புரிவோருக்கு "ஆக்கினை" காத்திருக்கிறது. யோவான் கூறுகிறார்; *"ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்"* (வெளி. 22:19).

தேவனுடைய கட்டளைக்கு மாறாக நடந்து கொண்ட நாதாப், அபியூ ஆகியோரின் செயல் தேவனுடைய எச்சரிப்பை மீறுவதால் ஏற்படும் அபாயத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. முதல் பிரதான ஆசாரியன் என்ற பேறு பெற்ற ஆரோனுடைய இம்மக்கள், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய ஆக்கினியை அவருடைய சந்நதியில் கொண்டு வந்தார்கள் (லேவி. 10:1). நாதாபும், அபியூம் தங்களுக்கு கட்டளையிட்டப்படி நடவாமல் (வசனம் 10) தேவன் கட்டளை யிடாத அந்நிய அக்கினியை பயன்படுத்தினர்கள். அவர்களுடைய கீழ்ப் படியாமைக்குக்கிடைத்த பரிசு மரணம்!... *"அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது: அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்"* (வசனம் 2).

இன்றும் சிலர், இந்தக் கீழ்ப்படியாத ஆரோனின் மக்களுக்கு வாரிசாக செயல்படுகின்றனர்! முழுக்குதலுக்குப் பதிலாக தெளிப்ப தையும் ஊற்றுவதையும் சிலர் திருமுழுக்காட்டுவதற்கு மாற்று முறை யாகக் கையாளுகின்றனர். தெளித்தோ அல்லது ஊற்றியோ ஞான ஸ்நானம் கொடுக்க வேதாகமம் எந்த ஒரு இடத்திலும் சொல்லவில்லை! மாறாக, நமது தேவனோடு ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்பட அதிகாரமும், கட்டளையும் கொடுக்கப்பட்டுள்ளது. (ரோமர் 6:3-4, அப். 10:48).

சகோதரனே, சகோதரியே! நோவா, சவுல், அரசன், நாதாப் அபியூ ஆகிய அனைவரும் தேவனுடைய வார்த்தைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்பதையும் கொடுக்கத் தவறினால் இழப்புகளும் வியாதி களும் நேரிடும் என்றும், தேவனுடைய நித்திய வசனத்துடன் நாம் எதையுமே (1) கூட்டவோ, (2) குறைக்கவோ, அல்லது (3) மாற்றவோ

கூடாதென்றும் அவர்கள் நம்மை எச்சரிக்கின்றனர். உண்மையாகவே, இந்தப் பலத்த எச்சரிக்கைகள் இன்றைக்கு வாழ்த்து கொண்டிருக்கும் நமக்கு வேதாகமம் விடுப்பவைகளாகும் (1 கொரி. 10:6) என்றும் இவற்றை நாம் நினைவில் கொண்டு நம் சிந்தனை யோட்டத்தை மாற்றிக் கொள்வோமா.

# நாளைக்கான நம்பிக்கை

நாளைக்கான நம்பிக்கை உண்டு
எல்லாம் மங்கலாகத் தெரிந்தாலும்
நாளைக்கான நம்பிக்கை உண்டு
அவர் மீது முழு நம்பிக்கை வைக்கும் போது

காரிருள் உன்னைச் சூழ்ந்து கொண்டாலும்
அவர் அங்கேயும் இருக்கிறார்
அவருடைய அன்பினாலே
அங்கேயும் உனக்கு வேண்டியதுண்டு

எல்லாம் முடிந்துவிட்டது
என்று நீ என்னும் வேளையில்
அவர் உன்னருகே வந்து
உனக்கான ஆறுதலைத் தருகிறார்

என்னைவிட்டுப் போகமாட்டார்
என்கிற உத்திரவாதம் உனக்குக் கிடைக்கிறது
ஏனெனில் உன் இருதயத்தில்
வாசம் செய்யத் துவங்குகிறார்



26.1.2015 அன்று பெரம்பூரில் நடந்த வேதாகம கருத்தரங்கில் நமது ஆசிரியர்



29.1.2015 அன்று சென்னை அயபாக்கத்தில் நடந்த பெண்கள் கூட்டத்தில் சகோ. ரேச்சல் நாயகம்



29.1.2015 அன்று அயபாக்கத்தில் சகோ. ஜெயசீலன் இல்ல திறப்பு விழாவில் ஆசிரியர் மற்றும் ஊழியர்கள்



8.2.2015 அரக்கோணத்தில் சகோ. சம்மா குடும்ப நிகழ்ச்சியில் ஒரு பகுதி



சகோதரி. ஜெயசீலன் அவர்களுடன் சகோதரி. ரேச்சல் நாயகம்



அயப்பாக்கம் பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரம்பூர் சபையாரில் ஒரு சிலர்

## World Evangelism Gospel Media

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**

Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**



Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**



Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**

Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thuraday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**


Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thuraday, Saturday.**


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


**இந்நிகழச்சிகளை தவறமால்**
**பார்த்து, கேட்டு பயனடையுங்கள்.**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


# எங்களது இதர வெளியீடுகள்












சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam